OS No. 170/2022

Dated: 27.11.2024

**PW 1– முரளிதரா. த.பெ. சந்திரய்யா**

**1,7,9 , 12 –15 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் 1–ம் பிரதிவாதி ,2–15 பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த ஆவணங்கள் செல்லாது என்று வழக்கு போட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான் . செல்லாது என்று சொல்லுவதற்கு காரணம் கௌஸ்பாஷா கொடுத்த செக் பாஸ் ஆகவில்லை என்றால் சரிதான் . நான் கௌஸ்பாஷாவுக்கு 24.12.2020 தேதியிட்ட ஒரு பதிவு செய்யப்பட் பொது அதிகார பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் . அவ்வாறு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுக்கும்போது நான் ஒரு ரசீது கொடுத்தேன் என்று சொன்னால் ரசீது கொடுத்துள்ளேன் , செக் கொடுத்ததற்கு அந்த ரசீதை கொடுத்துள்ளேன். சொத்தை விற்பதற்கு கிரய ஆவணம் செய்யாமல் பொது அதிகார பத்திரம் கௌஸ்பாஷாவுக்கு எழுதி கொடுத்தேன் என்று சொன்னால் அந்த நிலத்தை டெவலப் செய்வதற்கும் , அவர் கிரயம் செய்வதற்கும் அந்த பொது அதிகார பத்திரத்தை எழுதிக்கொடுத்தேன். சொத்தை கௌஸ்பாஷாவுக்கு விற்பதற்காக பேசி தான் 1 கோடி 15 இலட்சம் என்று விலை நிர்ணையம் செய்து அதற்கான பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்ததாக நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

ஆகையால் நிலத்தை டெவலப் செய்வதற்கு அந்த பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்ததாக நான் சொல்லும் விவரங்கள் தவறானவை என்று சொன்னால் கிரயம் செய்வதற்கும் நான் அந்த பொது அதிகார பத்திரத்தை கௌஸ்பாஷாவுக்கு எழுதிக்கொடுத்தேன் . பொது அதிகார பத்திரம் எழுதும்போது ஒரு ரசீது எழுதி கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். அந்த ரசீது தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவதுதான் என்று சொன்னால் அது சரியல்ல . ஆனால் அதிலுள்ள பக்கங்களிலுள்ள

கையெழுத்து என்னுடையது தான ஆனால் அதில் கையெழுத்துக்கு மேல் குறிப்பிட்டுள்ள விவரங்கள் தவறானவை . நான் ஒரே ஒரு ரசீது தான கௌஸ்பாஷாவுக்கு கொடுத்தேன். நான் எழுதி இருந்த ரசீதில் தான் கையெழுத்து போட்டேன்.

தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ரசீதில் தான் நான் கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் அந்த ரசீதை நான் மொபைலில் போட்டோ எடுத்துள்ளேன் அதை பார்த்தால் அந்த ரசீது தானா என்று சொல்லிவிடலாம் ஆனால் தற்போது காண்பிக்கப்படும் ரசீதிலுள்ள கையெழுத்து என்னுடையது ஆனால் அதிலுள்ள விவரங்கள் தவறானவை. இந்த வழக்கில் நான் ஜெராக்ஸ் ரசீது ஒன்றை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அந்த ஜெராக்ஸ் ரசீதின் அடிப்படையில் தான் செக் என்னிடம் கொடுத்தார் என்றும் , அந்த செக் பணமின்றி திருப்பப்பட்டது என்றும் அதனால் தான் கிரய ஆவணங்களை ரத்து செய்யவேண்டும் என்று நான் கூறுகிறேன் என்று சொன்னால் சரிதான்.

**S/d..Thiru.V.Damodaran,**
**Additional District Judge,**
**Krishnagiri.**